வணிகக்கல்வி

போக்குவரத்தும் வழங்கல் சேவையும்



e-thaksalawa
The National e-learning Portal for The General Education
Start Your Learning Journey with e-thaksalawa

தேர்ச்சிமட்டம் - 10.4 :- போக்குவரத்தையும் வழங்கல் சேவை தொடர்பாக அறிந்து கொள்வர்.

போக்குவரத்தும் வழங்கல் சேவையும் (Logistics).

நுகர்வோர் தேவை விருப்பங்களை நிறைவு செய்வதை உறுதிப்படுத்தும் வகையில் பொருட்கள் சேவைகள் மற்றும் அவை தொடர்பான தகவல்கள் முன்னும் பின்னும் பாய்ந்து செல்லல், அவற்றின் தொடக்கச் சந்தப்பத்திலிருந்து நுகர்வு வரை வினைத் திறனாகவும் பயனுறுதி பொண்டதாகவும் திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தும் செயல்முறை போக்குவரத்தும் வழங்கல் சேவையும் எனப்படும்.

நிறுவனமொன்றின் செயற்பாட்டுக் கருமங்கள் சீராகப் பாய்ந்து செல்வதற்கு திட்டமிடப்பட்ட போக்குவரத்து வழங்கல் சேவை முறைமையொன்று மிக அத்தியாவசியமானதாகும்.

போக்குவரத்தும் வழங்கல் சேவை முறைமையின் அடிப்படைச் செயன்முறைகள்

1. உள்வந்த போக்குவரத்தும் வழங்கல் சேவையும் (In Bound Logistics).

மூலப்பொருட்களை வழங்குனரிடம் இருந்து கொள்வனவு செய்வதிலிருந்து உற்பத்தி செய்யப்படும் சந்தர்ப்பம் வரையான அசைவுகள் ஆகும்.

2. வெளிச் சென்ற போக்குவரத்தும் வழங்கல் சேவையும் (Out Bound Logistics).

உற்பத்திச் செயன்முறைகள் பூர்த்தியாக்கப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து உற்பத்திப் பொருள் அல்லது குறித்த தகவல்கள் இறுதி நுகர்வோனுக்கு வழங்கும் வரையிலான அசைவுகள்.

Vendor வழங்குனர் → Manufacture உற்பத்தியாளர் → Whole Saler மொத்த வியாபாரி → Retailer சில்லறை வியாபாரி → Consumer நுகர்வோர்

In Bound Logistics → ← Out Bound Logistics →

தொகுப்பு : திருமதி.வி.செல்வகுமார், ஆசிரியர் - வணிகக்கல்வி, (யா/நாவற்குழி ம.வி - கைதடி)
கணினி வடிவமைப்பு : திரு.ச.சசிஸ்குமார், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

போக்குவரத்தும் வழங்கல் சேவை முறைமைகள்

நிறுவனங்களின் தன்மை, உற்பத்திகளின் தன்மை என்பவற்றிற்கமைய பல்வேறுபட்ட வகையிலான போக்குவரத்து வழங்கல் சேவை முறைமையொன்று காணப்படலாம்.

அவை பின்வருமாறு :-

1. சமநிறை கொண்ட போக்குவரத்து மற்றும் வழங்கல் சேவை முறைமை (Balanced Logistics System).

அதாவது உற்பத்தியின் பின்னர் முடிவுப் பொருட்கள் நுகர்வோர் வரை சென்றடையும் அல்லது பாய்ந்து செல்லும் நிலை கொண்ட முறைமை ஆகும்.

EG: நெஸ்லே, யுனிலிவர் போன்ற நுகர்வுப் பொருட்களை வாங்கும் நிறுவனங்கள்

2. உற்பத்திச் செயன்முறை வரை பாய்தல் சிக்கல் கொண்ட முறைமை (Heavy Inbound Logistics Systems).

உற்பத்திக்கான மூலப்பொருட்களை பெற்றுக்கொள்வதில் சிக்கல் நிறைந்த முறைமை.

Eg: விமானங்களை உற்பத்தி செய்கின்ற நிறுவனங்கள். அதாவது விமானங்களை உற்பத்தி செய்வதற்குத் தேவையான பொருட்கள் சேவைகளை பல்வேறு தரப்பினர்களிடம் இருந்து பெற்றுக் கொள்வதில் காணப்படும் சிக்கல் தன்மை ஆகும். ஆனால் விமான உற்பத்திச் செயன்முறையானது சிக்கல் நிறைந்ததல்ல.

3. உற்பத்தியின் பின்னர் நுகர்வோனின் கைக்கு கிடைக்கச் செய்யும் சிக்கல் நிறைந்த முறைமை (Heavy Outbound Logistics Systems).

ஆபத்துத் தன்மை கொண்ட பொருட்களை உற்பத்தி செய்த பின்னர் நுகர்வோருக்கு வழங்கும் வரையான செயற்பாடுகள் சிக்கல் நிறைந்ததாகக் காணப்படல்.

Eg: இரசாயனப் பொருள் உற்பத்திக் கம்பனி—அதாவது இரசாயனப் பொருட்களைக் களஞ்சியப்படுத்தல், பொதியிடல், போக்குவரத்து என்பனவற்றை மிக அவதானத்துடன் மேற்கொள்ள வேண்டுமென்பதால் இச்செயன்முறை சிக்கல் கொண்டது.

4. உற்பத்திப் பொருட்களை விநியோகித்த பின்னர் மீள் பாய்ச்சலுடன் கூடிய முறைமை (Reverse Logistics Systems).

நுகர்வோருக்கு விநியோகித்த உற்பத்திப் பொருட்களை அவர்களின் பாவனையின் பின் மீள் பாவனைக்குரிய பொருட்களை மீளப்பெற்றுக் கொள்ளும் முறைமையாகும்.

Eg: வாயுத்தாங்கி (Gas Slinder) போன்ற மீள் ஒப்படைக்கும் பொருட்கள், பயன்படுத்திய பொருளை மீள வழங்கல் (கண்ணாடி சோடா போத்தல்).

தொகுப்பு : திருமதி.வி.செல்வகுமார், ஆசிரியர் - வணிகக்கல்வி, (யா/நாவற்குழி ம.வி - கைதடி)
கணினி வடிவமைப்பு : திரு.ச.சசிஸ்குமார், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

போக்குவரத்தினதும் வழங்கல் சேவையினதும் முக்கியத்துவம்.

1. சரியான உற்பத்தி, சரியான அளவு, சரியான நேரம், சரியான இடம், சரியான விலையில், நல்ல நிலையில் சரியான நுகர்வோருக்கு விநியோகிப்பதற்கு.
2. சரக்கிருப்புக் கட்டுப்பாடு, உற்பத்தித் திட்டமிடல், பொருள் கொள்வனவு, போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் போன்ற கருமங்களை மேற்கொள்வதற்கு.
3. சகல இயந்திரங்களுக்கும் அனைத்து வேலை மத்திய நிலையங்களுக்கும் தேவையான பொருட்கள் தேவையான அளவில் தேவையான தரத்துடன் உரிய நேரத்தில் கிடைக்கப் பெறுகின்றதா என்பதை உறுதிப்படுத்துவதற்கு.
4. சந்தை ஆய்வு, தேவைகளைத் திட்டமிடல் உற்பத்தி செய்வதா, கொள்வனவு செய்வதா என்பதைத் தீர்மானித்தல் என்பவற்றின் மூலம் கிரயத்தை இழிவுபடுத்திக் கொள்வதற்கும் வழங்கல் சங்கிலியினைத் தொடர்ச்சியாகப் பேணிச் செல்வதற்கும்.

போக்குவரத்தினதும் வழங்கல் சேவையினதும் அனுகூலங்கள்.

1. உற்பத்திகளைத் தொடர்ச்சியாகச் சந்தைக்கு வழங்குவதன் மூலம் நுகர்வோனின் நம்பிக்கையினைப் பெற்றக் கொள்ள முடியும்.
2. செலவுக் கருமங்கள் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனால் வீணாதல், கிரயமாதல் என்பன குறைவதன் காரணமாகக் கிரயத்தை இழிவுபடுத்திக் கொள்ள முடியும்.
3. போட்டிக்குச் சிறப்பாக முகங்கொடுக்க முடியும்.
4. இயந்திர உபகரணங்கள், ஊழியர்கள் சார்பாக ஏற்படும் நேர்ச் செலவுகளை இழிபடுத்திக் கொள்ள முடியும்.
5. உற்பத்திகளின் தரத்தினைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.
6. மூலப்பொருள் முகாமைத்துவம் நல்ல முறையில் இடம்பெறுவதனால் பிரச்சனைகள் ஏற்படாது.
7. தொழிலில் தலைவராக உருவாக முடிதல்.

Copyright ©

தொகுப்பு : திருமதி.வி.செல்வகுமார், ஆசிரியர் - வணிகக்கல்வி, (யா/நாவற்குழி ம.வி - கைதடி)
கணினி வடிவமைப்பு : திரு.ச.சசிஸ்குமார், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

ஒப்படை

பின்வரும் நிறுவனங்களில் ஒன்றைத் தெரிவு செய்து பின்வரும் வினாக்களுக்கு விடைதருக.

1. பழப்பாகு உற்பத்தி நிறுவனம்.
2. சில்லறை வியாபார நிலையம்
3. நறுமணப் பொருள் உற்பத்தி நிறுவனம்
4. வாயு முகவர் நிறுவனமொன்று.

அறிக்கை சமர்ப்பிக்க வேண்டிய விடயங்கள்.

1. மூலப் பொருட்கள் முடிவுப் பொருட்களை வழங்குநர்களிடம் இருந்து கொளவனவு செய்வது முதல் உற்பத்திக்கான சந்தர்ப்பம் வரையில் மேற்கொள்ள வேண்டிய கருமங்களைப் பட்டியல்படுத்தவும்.
2. உற்பத்திச் செயன்முறை முடிவுற்ற சந்தர்ப்பம் முதல் இறுதி உற்பத்தி நுகர்வோனுக்கு விநியோகிக்கும் வரை மேற்கொள்ள வேண்டிய கருமங்களின் பட்டியல் ஒன்றைத் தயாரிக்கவும்.
3. போக்குவரத்தினையும் வழங்கல் சேவையினையும் முறையாகத் திட்டமிடுவதன் மூலம் பெற்றுக் கொள்ளக் கூடிய அனுகூலங்களின் பட்டியலொன்றைத் தயாரிக்கவும்.

பயிற்சி
பகுதி - I

1. நிறுவனமொன்றின் செயற்பாட்டுக் கருமங்கள் சீராகப் பாய்ந்து செல்வதற்கு திட்டமிடப்பட்ட ..... முறைமையொன்று அத்தியாவசியமானதாகும்.

2. மூலப்பொருட்களை வழங்குநர்களிடமிருந்து பெற்று உற்பத்தி செய்வது வரையான அசைவுகள் ..... என அழைக்கப்படும்.

3. உற்பத்திச் செயன்முறைகள் பூர்த்தியாக்கப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து உற்பத்திப் பொருள் நுகர்வோரைச் சென்றடையும் வரையிலான அசைவுகள் ..... என அழைக்கப்படும்.

4. பின்வருவனவற்றுள் போக்குவரத்து மற்றும் வழங்கல் சேவை முறைமை செயன்முறைமையின் அடிப்படை அம்சம் அல்லாதது.

   I. உற்பத்தியாளர்
   II. மொத்தவியாபாரி
   III. சில்லறை வியாபாரி
   IV. முகாமையாளர்
   V. வழங்குநர்.

5. உற்பத்தியின் பின்னர் நுகர்வோனின் கைக்குக் கிடைக்கச் செய்யும் சிக்கல் நிறைந்த முறைமைக்கு உதாரணமாக அமைவது

   I. நெஸ்லே நிறுவன உற்பத்திகளை வாங்கும் நிறுவனங்கள்.
   II. விமானங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள்.
   III. கிருமிநாசினி உற்பத்தி செய்யும் நிறுவனங்கள்
   IV. யுனிலிவர் நிறுவன உற்பத்திகளை வாங்கும் நிறுவனங்கள்.
   V. காஸ் (Gas) உற்பத்தி செய்து நிரப்பும் நிறுவனங்கள்.

தொகுப்பு : திருமதி.வி.செல்வகுமார், ஆசிரியர் - வணிகக்கல்வி, (யா/நாவற்குழி ம.வி - கைதடி)
கணினி வடிவமைப்பு : திரு.ச.சசிஸ்குமார், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

பகுதி - II வினாக்கள்

1. போக்குவரத்து வழங்கல் சேவை முறைமையின் அடிப்படைச் செயன்முறைகள் இரண்டையும் தருக?

2. போக்குவரத்து வழங்கல் சேவை இடம்பெறும் செயன்முறையினை பாய்ச்சல் கோட்டுப்படத்தில் தருக?

3. பின்வரும் போக்குவரத்து வழங்கல் சேவை முறைமைகளுக்கு இரண்டு உதாரணங்கள் வீதம் தந்து விளக்குக.

   I. சமநிறை கொண்ட போக்குவரத்து மற்றும் வழங்கள் சேவை முறைமை

   II. உற்பத்திச் செயன்முறை வரை பாய்தல் சிக்கல் கொண்ட முறைமை.

4. வணிகருக்கு போக்குவரத்து வழங்கல் சேவையினது முக்கியத்துவத்தைக் குறிப்பிட்டு விளக்குக.

5. போக்குவரத்து வழங்கல் சேவையினதும் அனுகூலங்களைப் பட்டியல் படுத்துக.

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு : திருமதி.வி.செல்வகுமார், ஆசிரியர் - வணிகக்கல்வி, (யா/நாவற்குழி ம.வி - கைதடி)
கணினி வடிவமைப்பு : திரு.ச.சசிஸ்குமார், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk